# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 27.01.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

*உஸ்குரூ முகாஸின மவ்தகும் - உங்களில் மரணித்தவர்களின் சிறப்புகளை எடுத்துக் கூறுங்கள். மேலும் அவர்களின் தீமைகளைக் கூறாதீர்கள்.*

ஒவ்வொரு மனிதனிடமும் நன்மைகளும் இருக்கின்றன; பலவீனங்களும் இருக்கின்றன. ஆனால், வஃபாத் ஆன பிறகு மனிதனுக்கு இவ்வுலகுடன் அவனுக்குள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுவதால் இப்போது உலகில் அவரது பலவீனங்கள், தீமைகள் ஆகியவற்றை எடுத்துக்கூற வேண்டிய தேவையில்லை. ஆனால், அவரது சிறப்புகளையும், நன்மைகளையும் கண்டிப்பாக எடுத்துக் கூற வேண்டும். அதைப் பற்றி கண்டிப்பாக பேச வேண்டும். இதனால் நன்மைகளைச் செய்வதற்கான ஆர்வம் உருவாகும். மேலும் மரணித்தவரின் மக்ஃபிரத்திற்காக துஆ வெளிப்படும். அவரது நன்மைகளை எடுத்துக் கூறும் போது அதன் மூலம் அவரது மன்னிப்பிற்கான வழியும் ஏற்பட்டு விடும். இந்த சிறப்புகள் அல்லது பலவீனங்கள ஒவ்வொரு நபரிடமும் இருக்கின்றது. இது மனிதனின் இயல்பாகும். சில நேரங்களில் நன்மைகளின் பக்கம் அவன் அதிகமாக கவனம் செலுத்துகின்றான். சில நேரங்களில் அவனிடம் சில பலவீனங்கள் உருவாகி விடுகின்றது. ஆனால், சில மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்களது சிறப்புகளும் நன்மைகளும் எப்படி மின்னுகின்றது என்றால், அவை நமது பார்வைகளிலிருந்து மனித பலவீனங்களை முற்றிலும் மறைத்து விடுகின்றன. அவர்களது நன்மைகள் எவ்வளவு விரிவானதாகவும் பரவுகின்றவையாகவும் உள்ளனவென்றால் அவற்றிற்குப் பின்னால் பலவீனங்கள் ஒளிந்து கொள்கின்றன. எந்த மக்களின் நன்மைகள், சிறப்புகள் ஆகியவை அவரைப் பற்றி அறிந்துள்ள ஒவ்வொருவரது நாவாலும் பேசப்படுகின்றதோ அப்படிப்பட்ட மக்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

ஒரு ஹதீஸின்படி இப்படிப்பட்ட நிலை இருந்தால் பிறகு அப்படிப்பட்ட நபருக்கு சுவர்க்கம் கிடைப்பது வாஜிப் ஆகி விடுகின்றது. இன்று நான் அப்படிப்பட்ட ஒரு நபரைப் பற்றி கூறுவேன். அவரைப் பற்றி அறிந்துள்ள ஒவ்வொருவரும் அவரது சிறப்பு அம்சங்களை தமது நாவுகளால் எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட அந்த நபர் ஒரு பாகிஸ்தானி அஹ்மதியோ அல்லது இந்திய அஹ்மதியோ அல்ல. ஏதாவது ஒரு சஹாபியின் சந்ததிகளில் ஒருவராகவோ, பிறப்பால் அஹ்மதியாகவோ அவர் இருக்கவில்லை. ஒரு நீண்ட காலம் வரை அதாவது சிறு வயதிலிருந்து இளைஞராகும் வரை, பிறகு முதியவராகும் வரை கலீஃபாக்களின் சிறந்த தாக்கத்தின் கீழ் இருந்தவாறு அல்லது ஜமாஅத்தின் நிழலின் கீழ் இருந்தவாறு அவரது தர்பிய்யத்திலிருந்து வரவில்லை. இவர் சில வருடங்களுக்கு முன்பு தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்தார்கள். மேலும் பலரையும் தனது சிறப்புகளால் முந்தி விட்டார். இவர் நமது சகோதரரான மதிப்பிற்குரிய ரவீல் புகாரி சாஹிப் ஆவார்கள். இவர் ரஷ்யர் ஆவார். இவரது வஃபாத் ஜனவரி 24 ஆம் தேதி நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ரஷ்யாவிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டிருந்த ஆரம்ப கால ரஷ்ய அஹ்மதிகளில் இருந்து வந்த ஒரு பிடி மணல் துகள்களில் ஒரு துகளாக இருந்தாலும், தனது அறிவு, ஞானம், கலப்பற்ற மனத்தூய்மை, நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பது, சுயநலமின்மை, கிலாஃபத்தோடு இருந்த எல்லையற்ற தொடர்பு, தாழ்மைக்குணம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை ரஷ்யாவில் எட்ட வைக்க வேண்டும் என்ற துடிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, இவர் ஒரு ஒளிமயமான நட்சத்திரமாக இருக்கின்றார். அந்த நட்சத்திரம் பலருக்கும்

வழிகாட்டியிருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கிடைத்த இறை அறிவிப்பு நிறைவேறியவாறு இன்ஷா அல்லாஹ் ரஷ்யாவில் அஹ்மதிய்யத் மணல் துகள்களைப் போல் பரவும் போது வரலாறு ரவீல் புகாரி சாஹிப் அவர்களது தொண்டுகளை எப்போதும் நினைவு கூறும் இன்ஷா அல்லாஹ். இப்போது நான் மதிப்பிற்குரிய ரவீல் புகாரி சாஹிப் தொடர்பாக மேலும் சில விஷயங்களைக் கூறுகின்றேன்.

அஹ்மதிய்யத் இவருக்கு அறிமுகமான காலத்தில், இவர் அஹ்மதியாக இல்லாத சமயத்திலும் கூட ரவீல் சாஹிப் அவர்கள் ஜமாஅத்திற்கு தொண்டுகளைச் செய்துள்ளார்கள். மொழிபெயர்ப்புப் பணிகளை அப்போது அவர்கள் செய்திருந்தார்கள். பிறகு இங்கு B.B.C.-ல் ரஷ்யன் நிகழ்ச்சிகளில் அவர்கள் வேலை பார்த்து வந்தார்கள். அப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, தன்னை அவர் முழுமையாக ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தார். எப்படியாவது நான் எனது எந்தவொரு நொடியையும் அஹ்மதிய்யத்திற்கு தொண்டு செய்யாத நிலையில் கழித்து விடக்கூடாது என்பதே இரவும் பகலும் அவரது ஒரே துடிப்பாக இருந்திருக்கும் என்று நமக்கு தோன்றுகிறது. எனது ஒவ்வொரு நொடிப் பொழுதும் அஹ்மதிய்யத்திற்கு தொண்டு செய்வதில் கழிய வேண்டும் என்று அவர் கருதினார். வஃபாத் ஆன அந்த நாளிலும் கூட தொண்டு செய்கின்ற இதே உணர்வால் அவர் நிரம்பியிருந்தார்.

M.T.A.-ற்காக ஒரு நிகழ்ச்சி தயார் செய்வதற்காக – ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் தயாராகிக் கொண்டிருந்தார். இவ்வாறு அவர் தயாராகிக் கொண்டிருந்த சமயத்தில் அவரது உடல்நிலை மோசமாகி விட்டது. அதனால் அவர் அந்த நிகழ்ச்சிக்கு வர முடியாது என்று அவரிடமிருந்து வந்த தொலைபேசி அழைப்பு மூலம் தெரிய வந்தது. அவருக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டது. அது அவரது உயிரைப் பறித்தது. இவ்வாறு அவரது வஃபாத் நிகழ்ந்தது. வஃபாத் ஆன சமயத்தில் இவருக்கு வயது 61. இவரோடு தொடர்புடையவர்களில் தற்போது இவரது மனைவி இருக்கின்றார். இவருக்கு எந்த சந்ததிகளும் இருக்கவில்லை. இவரது மனைவிக்கு ஒரு மகன் இருந்தார். அவர் ஏற்கனவே வஃபாத் ஆகியிருந்தார். 1990 ஆம் ஆண்டில் கலீல் தகாவர் சாஹிப் மூலம் ஜமாஅத் பற்றிய அறிமுகம் இவருக்கு கிடைத்தது. ராவில் சாஹிப் அவர்கள் தாத்தாரி சமுதாயம் தொடர்பாக ஆராய்வதற்காக இலண்டன் வந்திருந்தார். அப்போது அவருக்கு ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. பிறகு இவர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களைச் சந்தித்ததன் விளைவாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்.

**ராவில் சாஹிப் அவர்களே ஓரிடத்தில் கூறினார்கள்:**

நான் பிறப்பால் முஸ்லிமாக இருந்தாலும், நாத்திக சமுதாயத்தில் இருந்ததன் விளைவாக 1989 ஆம் ஆண்டு வரை இஸ்லாத்தைப் பற்றி எனக்கு அறவே ஒன்றும் தெரியாத நிலை இருந்தது. எந்த சமூகத்தில் நான் வளர்ந்து வந்தேனோ அங்கு அந்தக் காலத்தில் இஸ்லாத்திறகும் எனது தாய் மொழியான தாத்தாரிய மொழியை உபயோகிப்பதற்கும் பேசுவதற்கும் முழுமையான தடை இருந்து வந்தது. பாடத்திட்டத்தில் இருந்தும் தாத்தாரிய மொழி அகற்றப்பட்டது. ஆனால் தாத்தாரிய மக்களின் மத்தியில் இஸ்லாமிய தாக்கம் நிலைத்திருந்தது. அவர்கள் கட்சித் தொண்டில் பணிபுரிபவராக இருந்தாலும் சரி அல்லது பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தாலும் சரி அவர்கள் ஒவ்வொரு வேலையையும் ஆரம்பிப்பதற்கு முன்பாக கண்டிப்பாக பிஸ்மில்லாஹ் என்று கூறி வந்தனர். தாத்தாரிய நாகரீகம் ஆயிரம் வருடங்கள் பழமையானதாக இருந்தாலும் அதன் மீது எப்பொழுதும் இஸ்லாத்தின் தாக்கம் இருந்து வந்தது. எனது பெற்றோர்களின் காலத்தில் இருந்து வந்த நாகரிகத்தின் வலிமை, நான் வளர்ந்து வந்த காலத்தில் குறைந்திருந்தது. எப்போதும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து பள்ளிக்கு சென்று தொழுகைகளை நிறைவேற்றக்கூடிய ஒளிந்து மறைந்து வாழ்ந்த முஸ்லிமாக நான் இருந்தேன் என்று என்னால் கூற முடியாது. முற்றிலுமாக அப்படிப்பட்ட நிலை இருக்கவில்லை. நான் ஒரு மாணவனாக இருந்தேன்; இளைஞராக இருந்தேன். இந்த சமுதாயத்திற்கு ஏற்ப எந்த விஷயம் எனது மூளையில் உதித்ததோ அதை நான் செய்து வந்தேன்.

**பிறகு கூறுகின்றார்கள்:** 1989 ஆம் ஆண்டில் சிறந்த நிலைமை உருவானது. மத சுதந்திரம் உட்பட எல்லாவித சுதந்திரமும் கிடைக்க ஆரம்பித்தது. ஆனால், உண்மையான மதத்தை அறிந்து கொள்வதற்கு

மதத்தைப் பற்றிய ஞானம் வெறும் அறிவிப்பூர்வமான ஆதாரங்களால் மட்டும் கிடைக்க முடியாது என்பதை நான் அறிந்திருந்தேன். ஈமானின் அருளை இறைவன் தானாக வழங்குகின்றான். நான் இவ்வித சிக்கலில் சிக்கியிருந்தேன். முழுக்க முழுக்க இஸ்லாம் மட்டும் தான் சிறந்த போதனைகளை தருகின்றது என்பதை அறிவின் அடிப்படையில் நான் புரிந்து கொண்டேன். ஆனால், அவ்வாறிருந்தும் கூட எனது ஆன்மா முற்றிலும் காலியாக இருந்தது. இந்த சந்தேகங்களிலிருந்து என்னை விடுவித்தது ஒரே விஷயம், சில நபர்களுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பாகும். அவர்களை இலண்டனில் சந்தித்தேன். இவர்களை நான் உண்மையான முஸ்லிமாக கருதுகின்றேன். இவர்கள் சார்ந்துள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்து தான் இஸ்லாமிய உலகில் மார்க்கமற்றவர்கள் என கருதப்படுகிறார்கள்.

**பிறகு எழுதுகின்றார்கள்:** இறைவனது படைப்பினத்தை நேசிக்காத வரையில் எவரும் இறைவனது உண்மையான நேசத்தைப் பெற முடியாது என்பதே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனையாகும். இதை தெரிந்ததுமே இதுவே எனது இலக்கு என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டது. எனக்கு எல்லாமே ஒன்றாக கிடைத்து விட்டது. அதாவது கல்வி, அறிவு, அறிவுப்பூர்வமான ஆதாரங்களைப் பெறுவதற்காக என்னிடமிருந்த தாகம் தணிவது, நல்ல மதத்தைத் தேடுவது, ஆன்மீக அனுபவங்கள் இவை யாவும் ஒரே இடத்தில் எனக்கு கிடைத்து விட்டது.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1993 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய தமது உரையில் கூறினார்கள்:**

இந்த புதிய காலக்கட்டத்தில் மீண்டும் ஹங்கேரியில் தலைமையகம் நிறுவப்பட்டுள்ளது. முதலில் இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் தான் அங்கு பிரச்சார நிலையம் நிறுவப்பட்டது. பிறகு சில நிலைமைகளின் காரணமாக அதனை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:** இந்த புதிய காலக்கட்டத்தில் அங்கு தொடர்புகள் உருவானது. இந்தக் காலத்தில் கிடைத்த முதல் பழம் மேக்லூஸ் ஜூலை ஆவார்கள். ஹங்கேரிவாசியான இவர் தாமாகவே இங்கிலாந்திற்கு வந்தார். அறிவு சார்ந்த துறைகளில் மிகவும் பிரசித்தி பெற்ற நமது ரஷ்ய நண்பரான ராவில் புகாரி சாஹிப் அவர்களுக்கு, மேக்லூஸ் ஜூலை சாஹிப் அவர்களுடன் அதிகமான தொடர்பு இருந்து வந்தது. மேக்லூஸ் ஜூலை சாஹிப் அவர்கள் இவரை மீண்டும் மீண்டும் பள்ளிவாசலுக்கு அழைத்து வந்தார்கள். சில சந்திப்புகளிலேயே ராவில் சாஹிப் அவர்களின் உள்ளத்தின் நிலை மாறுவதை நான் கண்டேன். இறைவன் அருளால் அவர் பைஅத் செய்து விட்டு இங்கிருந்து சென்றுள்ளார். இங்கிருந்து திரும்பி சென்ற பிறகு அவர் ஹங்கேரியில் மேலும் தப்லீகிற்கான அடித்தளங்களை உறுதியாக நிறுவினார். ராவில் சாஹிப் அவர்களது கடந்த சுற்றுப் பயணத்தின் விளைவாக இறைவன் அருளால் அங்குள்ள ஜமாஅத்துகள் உறுதியாக வலுப்பெற்று விட்டன. அங்கு ஜமாஅத்திற்கு விரைவில் வளர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை அங்கு தென்படும் அடையாளங்கள் மூலம் நமக்கு ஏற்பட்டுள்ளது.

கிர்கிஸ்தானின் நமது சகோதரர் ராவில் சாஹிப் அவர்களின் சொந்த நாடான தாத்தாரிஸ்தானிலிருந்து முராத் ஸியானோஃப் சாஹிப் அவர்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டு மாநாடு நடைபெற்ற சமயத்தில் U.K. வந்திருந்தார். இவர் தமது கொள்கையில் உறுதியான பாதங்களுடன் நிலைத்திருந்தார். நமது நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொண்டார். தனது நாட்டிற்குத் திரும்பிய பிறகு அங்கும் தன்னை அஹ்மதி என்று கூறியவாறு நம்மோடு தொடர்பு வைத்திருந்தார். இவரது மகளும் மிகுந்த மனத்தூய்மையுடன் ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருந்தார். இவர்களில் ஒருவர் மற்றவரின் ஈமானுக்கு வலுவூட்டக் கூடியவர்களாக இருந்தார்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: இந்த சமுதாயங்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வது என்பது எளிதான ஒன்றல்ல. 70 வருடங்களாக இவர்கள் நாத்திகத்தின் நச்சுத்தன்மை நிறைந்த தாக்கத்தின் கீழ் இருந்து வந்தனர். இஸ்லாத்தோடு இவர்களுக்கு இருந்த உறவு முறியாத நிலையிலும், இஸ்லாமிய உணர்வு

இஸ்லாத்தைப் பற்றிய விளக்கங்கள் எதுவுமே அவர்களுக்கு தெரியாமல் இருந்தது. இஸ்லாமிய நாட்டைச் சார்ந்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் இஸ்லாத்திற்கு உள்ளே இருந்தாலும் மத ரீதியாக இஸ்லாத்தை செயல்படுத்துவதில் அவர்கள் இஸ்லாத்திற்கு வெளியில்தான் இருந்தார்கள். இவர்களை மீண்டும் இஸ்லாத்தில் நுழையச் செய்து இறைவனது ஏகத்துவம், அவனது உண்மை நிலை ஆகியவை தொடர்பான உறுதியை அவர்களது உள்ளங்களில் நுழையச் செய்கின்ற செயல், மிகுந்த உழைப்பை நாடுகின்றது. அதற்கு துஆக்களின் தேவை இருக்கின்றது. அது அற்புதங்கள் நிகழ்வதற்காக காத்திருக்கின்றது. எனவே, துஆ செய்யுங்கள். நாம் நம்மால் இயன்ற வரை முயற்சிகளைச் செய்கின்றோம். நாம் துஆக்களும் செய்து வருகின்றோம். அங்கு அல்லாஹ் அற்புதமான அடையாளத்தை காட்டுவதற்காக துஆ செய்யுங்கள். ஏனென்றால் ஆன்மீகப் புரட்சிகள் ஏற்படுவதற்கு துஆக்களை விட மிகவும் அதிகமாக அற்புத அடையாளங்கள் பலன்தரக் கூடியவையாக இருக்கும்.

அவர்கள் பிறப்பால் அஹ்மதியாக இருக்கவில்லை என்பதை ஏற்கனவே நான் கூறியிருந்தேன். ஆனால், அவரை பார்க்கும் போது எப்போதும் இவர் அஹ்மதியாகத் தான் இருந்தார் என்பது போல் தோன்றுகிறது. அவர்கள் உண்மையான பொருளில் அஹ்மதிய்யத்தின் தூதுவராக இருந்து வந்தார். எங்கு சென்றாலும் அவர் ஜமாஅத்தைப் பற்றி பேசி வந்தார். எங்கு ஜமாஅத்தின் பெயரை கேட்டதுமே எதிர்விளைவு இருக்கும் என்ற ஆபத்து இருந்ததோ, அந்த இடத்தில் கூட மிகுந்த நுட்பமான ஞானத்துடன் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அவர்களுக்கு வழங்கினார். ஜமாஅத்தின் போதனைகளை விளக்கி கூறுவார். மக்கள் இவை யாருடைய கொள்கை? என்று கேட்கும்போது ஜமாஅத்தின் பெயரை இவர் கூறுவார். பிறகு ஜமாஅத்தைப் பற்றி அவர்களுக்கு முழுமையாக அறிமுகம் செய்து வைப்பார். எந்தக் கூட்டங்களில் எப்படிப்பட்ட நூல்களைக் கொடுப்பது பொருத்தமானதாக இருக்கும்? எப்படிப்பட்ட பிரசுரங்களைக் கொடுப்பது பொருத்தமானதாக இருக்கும்? என்பதை இவர் கருத்தில் கொள்வார். இவரது நட்பில் அரசியல்வாதிகள், இலக்கிய அறிஞர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், பொருளாதார வல்லுனர்கள், வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய ஆண்கள், பெண்கள் ஆகியோர் இருந்து வந்தனர். ராவில் சாஹிப் அவர்களே ஒரு சிறந்த கவிஞராக இருந்தார்கள். மிகச் சிறந்த இலக்கிய மேதையாக இருந்தார். பத்திரிகையாளராக இருந்தார். மொழிபெயர்ப்பாளராக இருந்தார். தாயி இலல்லாஹ்வாக இருந்தார். இப்படிப்பட்ட பல சிறப்புகளை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான்.

இவர்களை அறிந்தவர்கள், இவர்களை பாராட்டக் கூடியவர்கள் ஆகியோரின் ஒரு விரிவான கூட்டம் இருக்கின்றது. ராவில் சாஹிப் மூலமாக ரஷ்யாவிலும், முந்தைய ரஷ்யப் பிரதேசங்களிலும் இதற்கு முன்னர் நமது முபல்லிக்குகளும், முஅல்லிம்களும் சென்றடைய முடியாமல் இருந்த இடங்களில் கூட அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டியது. அவ்வாறு முபல்லிக்குகள், முஅல்லிம்கள் மூலம் செய்தி எட்ட வைக்கப்பட்டிருந்தாலும் கூட மிக நீண்ட காலம் கடந்த பிறகே நிகழ்ந்தது. அவர்கள் மாஸ்கோ செல்லும் போது பெரும்பாலும் இலக்கிய மற்றும் கவிதையுடன தொடர்புடைய கூட்டங்களில் பங்கு பெறுவார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் போது எப்போதுமே ஏதாவதொரு வகையில் ஜமாஅத்தைப் பற்றி கூறுவார்கள்.

தங்களது நண்பர்களிடம் அதாவது அஹ்மதிகளிடம் நீங்கள் இந்த இடத்தில் இத்தனை மணிக்கு ஜமாஅத்தை அறிமுகப்படுத்துகின்ற இந்தந்த நூல்களை இவ்வளவு எண்ணிக்கையில் எடுத்துக் கொண்டு அங்கு வந்து விடுங்கள் என்று கூறுவார்கள். எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அதன் இறுதியில் ஜமாஅத்தை அறிமுகம் செய்து விட்டு, கண்டிப்பாக இந்த நூல்களை அங்கு வந்திருப்பவர்களுக்கு கொடுப்பார்கள். முதலிலேயே அந்த நூல்களைக் கொண்டு வந்து விடுவார்கள்.

இங்கு இலண்டனில் ரஷ்யன் டெஸ்க் நிறுவப்பட்டதிலிருந்து ராவில் சாஹிப் மிகுந்த உழைப்புடனும், மனத்தூய்மையுடனும், புத்துணர்வுடனும் பணியாற்றி வந்தார்கள். பணிகள் செய்து கொண்டிருக்கும் போது அவருக்கு பசி பற்றிய கவலை இருக்கவில்லை. வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் கவலைப்பட்டதில்லை. முழு கவனமும் ஜமாஅத்தின் பணிகளை நிறைவு செய்வதன் பக்கம் இருந்து வந்தது. எந்தவொரு பணியையும் அவர் பாதியில் விட்டதில்லை.

அவரோடு பணிபுரிகின்ற முபல்லிக்குகள் கூறுகின்றார்கள்: நாங்கள் சில சமயங்களில் நீங்கள் சோர்வடைந்து விட்டீர்கள். கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினோம். அதை கேட்டு விட்டு சிரித்தவாறு, நீங்கள் மிக விரைவில் சோர்வடைந்து விடுகின்றீர்களே என்று கூறுவார்கள். ஜுமுஆ குத்பாக்களை ரஷ்ய மொழியில் அவர்கள் தான் டப்பிங் செய்து வந்தார்கள். இதனால் இவருக்கு இந்த பணி தொடர்பாக எப்போதும் கவலை இருந்து வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தப் பணி மிகவும் விரிவான நிலையில் ஆரம்பமானது. மேலும் M.T.A.வில் குத்பா வர ஆரம்பித்தது. இவ்வாறே இன்டர்நெட்டிலும் வந்தது.

இவர் தமது தோழர்களிடம் சனிக்கிழமையன்று நீங்கள் குத்பாவின் மொழியாக்கத்தை முழுமையாக செய்து விட்டீர்களா? என்று கண்டிப்பாக கேட்டு வந்தார்கள். அல்லது எப்போது செய்து முடிப்பீர்கள்? என்று கேட்பார்கள். ஞாயிற்றுக் கிழமை காலையில் அல்லது ளுஹர் நேரத்திற்கு முன்பாக அதை டப்பிங் செய்ய வைப்பீர்களா? என்று கேட்பார்கள். சில சமயங்களில் வெள்ளிக்கிழமை அன்று மாலையிலேயே இது பற்றி கேட்பார்கள். எப்போது மொழியாக்கத்தை செய்து முடிப்பீர்கள்? என்று கேட்பார்கள்.

எதுவரை அந்த குத்பாவை முழுமையாக டப்பிங் செய்து கொடுக்க மாட்டார்களோ அதுவரை அமைதியற்ற நிலையில் நிம்மதியற்ற நிலையில் இருப்பார்கள். மாநாட்டு நாட்களில் கூட இவர்களது துரிதமான பணிகள், உழைப்பு, ஆர்வம் ஆகியவற்றிற்கு ஒரு தனி சிறப்பு இருந்து வந்தது. மூன்று நாட்களிலும் மார்க்க தொண்டிற்காக இவரிடம் காணப்படும் செயல் அளவிலான ஆற்றல், உணர்வு, வேகம் ஆகியவை குறிப்பாக பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கும். அவர்கள் M.T.A.வில் வருகின்ற கலீஃபாக்களின் உரைகளுடன் சொற்பொழிவு, மாநாடு சமயங்களில் நிகழ்த்துபவர்களின் சொற்பொழிவு –களையும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ரஷ்ய மொழியில் மொழியாக்கம் செய்வார்கள். ரஷ்யாவிலிருந்தும் முந்தைய ரஷ்யாவின் பிரதேசங்களிலிருந்தும் எந்த ஒரு விருந்தாளி மாநாட்டிற்கு வந்திருந்தாலும் அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடனும் மலர்ந்த முகத்துடனும் சந்திப்பார்கள். அவர்களுக்கு ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பற்றிய விஷயங்களைக் கூறுவார்கள். வருகின்ற விருந்தாளிகளின் ஈமானை அதிகரிக்க செய்வதற்கு காரணமாக இருக்கும் விஷயங்களை எப்போதும் அவர்கள் கூறுவார்கள். பிறகு விருந்தினர்களின் தேவைகளை கவனத்தில் கொள்வார்கள். மாநாட்டு அமைப்பாளர்களுக்கு இதுபற்றி கவனமூட்டுவார்கள். எவ்வாறு இந்த தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் கூறுவார்கள். மாநாட்டின் அருள்கள் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறும்போது, தமது தோழர்களிடம் ஏதாவதொரு வகையில் ரஷ்யா மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களை ஒருமுறை மாநாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுப்பார்கள். அவர்களை அழைத்து வந்து, காலத்தின் கலீஃபாவை சந்திக்க வைப்பது எந்த அளவு அவருக்கு பயனுள்ளதாகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்குமென்றால், அப்படிப்பட்டவர்களுக்கு பல வருடங்களாக நாம் தப்லீக் செய்து வந்தாலும் கூட அத்தகைய பயனும் தாக்கமும் கிடைக்காது என்று கூறி வருவார்கள். அதிகமான விருந்தினர்களை மாநாட்டிற்கு கொண்டு வருவதற்காக மிக அதிகமாக அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள். அவர்கள் பல ஜமாஅத் நூல்களை ரஷ்ய மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார்கள். ரஷ்யாவிலும் ஏனைய பிரதேசங்களிலும் தப்லீக் பணியில் போதுமான அளவில் அவை உதவியையும், ஒத்துழைப்பையும் தரக்கூடியதாக இருக்கின்றது. இந்த நூல்களைத் தவிர ரஷ்ய மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்கின்ற மிகச் சிறந்த தொண்டையும் அவர்கள் செய்துள்ளார்கள். இது அவர்கள் செய்துள்ள முக்கியமான பணியாகும்.

**ரஷ்யன் டெஸ்கில் உள்ள நமது முரப்பியான காலிது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

நானும் மாஸ்கோவைச் சேர்ந்த ருஷ்த்தம் ஹம்மாத் அலி சாஹிப் அவர்களும் 1999 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் திருக்குர்ஆன் உர்து மொழியாக்கத்தை கண்முன் நிறுத்தியவாறு புதிய ரஷ்ய திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு பணியைத் தொடங்கினோம். 2004 ஆம் ஆண்டு இந்தப் பணியை நிறைவு செய்தோம். இதற்குப் பிறகு செக்கிங், திருத்துகின்ற பணிகளை நாங்கள் இருவரும் சேர்ந்து ராவில் புகாரியுடன் பணி செய்தோம். இந்தப் பணி இலண்டனில் தான் நிறைவு பெற்றது.

பணி நடைபெற்ற சமயத்தில் இவர்கள் இரவென்றும், பகலென்றும் பாராமல் மூன்று மாதங்களிலேயே மிகுந்த ஆர்வத்துடனும் உழைப்புடனும் இந்தப் பணியை செய்து முடித்தார்கள். திருக்குர்ஆனின் மொழியாக்கம் என்பது ஒரு மிகப்பெரும் பொறுப்பாக இருப்பதால் அதனை மிகுந்த எச்சரிக்கையுடன் நாம் செய்ய வேண்டும். இதனால் செக்கிங் செய்த தருணங்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் என்ன பொருள் என்பதைப் பற்றி கேட்டறிந்து அவர்கள் திருப்தி அடைவார்கள். எப்படி நாம் மொழிபெயர்த்துள்ளோமோ அதேபோன்று தான் திருக்குர்ஆன் டெக்ஸ்ட்டில் உள்ளதா? என்பதை கவனத்துடன் பார்ப்பார்கள். இவற்றிற்கு ரஷ்ய மொழியில் மிக அதிகமாக பொருந்தக்கூடிய சொற்கள் எவையோ அவற்றை பயன்படுத்துவார்கள்.

இவர்கள் கூறுகின்றார்கள்: சில நேரங்களில் ஒரு வசனத்தை செக்கிங் செய்வதில் பல மணி நேரம் செலவாகி விடுகின்றது. இதன் மூலம் முழுமையாக அவற்றை புரிந்து அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். இவர்களது இந்தப் பணியின் விளைவாக இதுவரை ரஷ்ய மொழியில் திருக்குர்ஆனின் மூன்று பதிப்புகள் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது. இலண்டனில் 2006 ஆம் ஆண்டிலும், மாஸ்கோவில் 2007 ஆம் ஆண்டிலும், கஸகிஸ்தானிலிருந்து 2008 ஆம் ஆண்டிலும் இவை வெளி வந்துள்ளன. அது அல்லாஹ்வின் அருளால் ஒரு ஸதகா ஜாரியாவாக இருக்கும். மேலும் இது ராவில் சாஹிப் அவர்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும். ஏற்கனவே நான் கூறியது போன்று ராவில் சாஹிப் அவர்கள் மிகப்பெரும் அறிஞர் ஆவார்கள். பத்திரிகையாளர் ஆவார்கள். கவிஞர் ஆவார்கள். இவருக்கு பல்வேறு வகையான பட்டங்கள் கிடைத்துள்ளன. இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் தாத்தாரிஸ்தான் மிக உயர்ந்த பரிசான Moosa Jaleel Price of Honour என்ற விருது 1986 ஆம் ஆண்டில் கிடைத்தது. 2001 ஆம் ஆண்டில் Arts ற்காக தொண்டாற்றிய போது இவருக்கு ஒரு பரிசு கிடைத்தது. 2006 ஆம் ஆண்டில் தாரிஸ்தானின் மிக உயர்ந்த விருதான National Prize of Honour வழங்கப்பட்டது. பிறகு இவர்கள் எழுதிய ஒரு நூலிற்காக இவருக்கு மிகப்பெரும் விருது வழங்கப்பட்டது. இவரது இந்த நூல் ரஷ்யன் புத்தகக் கண்காட்சியில் 2009 ஆம் ஆண்டின் விருதினைப் பெற்றது. பிறகு அக்டோபர் 13 அன்று இன்னொரு பரிசும் இவர்களுக்கு கிடைத்தது. The Honour of Cultural Heritage என்ற கண்ணியமிக்க தகுதியும் இவருக்கு வழங்கப்பட்டது.

உலகம் முழுவதும் உள்ள பல்வேறு சபைகளில் உறுப்பினராகவும் அவர்கள் இருந்துள்ளார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று B.B.C. Russian service ரஷ்யன் சர்வீஸிலும் இவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். என்ஜியோ உஸ்தஸ்கீ என்ற இவர்களது தோழர் கூறுகிறார். இவர் B.B.C.ரஷ்யன் சர்வீஸின் உயர்நிலைக் கண்காணிப்பாளராக இருந்தவர்.

**ராவில் சாஹிப் அவர்களைப் பாராட்டியவாறு அவர்கள் இவர்களது மரணத்திற்குப் பிறகு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஒரு நீண்ட காலமாக B.B.C. ரஷ்யன் சர்வீஸில் பணிபுரிந்து வந்த நமது தோழரான ராவில் புகாரி அவர்கள் இப்போது நம்முடன் இல்லை. ராவில் புகாரி அவர்களுடன் ஏறக்குறைய 15 வருடங்கள் தோளோடு தோள் இணைந்தவாறு நான் பணிபுரிந்துள்ளேன். இத்தகைய உயர் தகுதிகளையுடைய உண்மையான தோழருடன் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருப்பதை எனது நற்பாக்கியமாக நான் கருதுகின்றேன்.

பிறகு இவர்கள் எழுதுகின்றார்கள்: குறைந்தக் கல்வியைப் பெற்றிருந்தாலும் மிக உயர்ந்த நிலையில் உள்ள கவிஞராகவும் உறுதியான ஈமானைக் கொண்டிருந்த உண்மையான முஸ்லிமாக ராவில் சாஹிப் இருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால் இவரை ஒரு மார்க்க அறிஞர் என்று கூறினால் அது மிகையாகாது. ராவில் சாஹிப் அவர்கள் தங்களிடமிருந்த பல்வேறு சிறந்த அம்சங்களின் காரணமாக பல மக்களிடத்திலும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அவரது தாக்கத்தின் கீழ் வருவதும் தவறல்ல. ஏனென்றால் அவர்கள் மிக உயர்வான நிலையிலிருந்து பேசக் கூடியவராக இருந்தார்கள். அந்த மனிதரது அறிவு பல்வேறு கோணங்களில் பரவிக் கிடக்கின்றது.

எந்த மக்கள் இவர்களை சந்தித்துள்ளார்களோ அவர்கள், இவர்கள் மிக இனிமையாகவும் அன்புடனும் பேசும் திறன் படைத்தவர்கள் என்றே கூறியுள்ளார்கள். மற்றவர்களை தன் பக்கம் ஈர்த்து விடுவார்கள்.

ரவீல் சாஹிபின் ஒரு நூலான Daaruga Bog Zunayeth இது ரஷ்ய மொழியில் உள்ள பெயராகும். அதாவது, இந்த “வழி எங்கு கொண்டு செல்லும் என்பதை இறைவனே அறிவான்” என்ற தமது நூலில் தனக்கு ஜமாஅத் பற்றி எப்படி அறிமுகம் கிடைத்தது என்பது பற்றி அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். அதன் சுருக்கம் இதுவாகும்.

(இலண்டனில்) நான் மாலை நேரத்தில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். நிகழ்ச்சி ஒன்றைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது தொலைபேசி மணி அடித்தது. அந்த வீட்டிலிருந்த பெண் தொலைபேசியை எடுத்தார். இங்கு நான் எவரையும் அறியாத நிலையில் தொலைபேசியை நான் எடுக்க வேண்டிய தேவை எனக்கு இருந்ததேயில்லை. ஏதாவது ஆங்கிலேயர் பேசிக் கொண்டிருப்பார் என நான் எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் வீட்டிலிருந்து அந்தப் பெண் தனது உரையாடலை முடிக்கும் போது அவர் தனக்கு போன் செய்தவரிடம் என்னிடம் ரஷ்யாவிலிருந்து ஒரு விருந்தாளி வந்துள்ளார் என்று கூறினார். ஆங்கிலேய வழிமுறைக்கேற்ப அவ்வாறு கூற வேண்டிய தேவையும் இல்லையே என நான் வியப்பில் ஆழ்ந்திருந்தேன். எனவே நடந்ததை நான் ஒரு அற்புதமாகக் கருதினேன். அவ்வாறு நடக்க வேண்டியது இருந்தது. திடீரென்று நான் தொலைபேசிக்கு அருகில் அழைக்கப்பட்டேன். என்னிடம் போன் கொடுக்கப்பட்டது. தொலைபேசியின் மறுபுறத்தில் பேசிய நபர், நான் எங்கிருந்து வந்துள்ளேன் என்பதை அறிவதிலுள்ள தனது விருப்பத்தை வெளிப்படுத்தியவாறு மறுநாள் என்னை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அவர் என்னுடன் பேசிய சமயத்தில் அஹ்மதிய்யத் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் வீட்டிலிருந்து வெளியே செல்ல எனது உள்ளமும் விரும்பியது. எனவே எனது சம்மதத்தை நான் அவருக்கு தெரிவித்தேன். பிறகு போனை நான் வைத்து விட்டேன்.

காலையில் என்னை அழைத்துச் செல்ல வண்டி வந்தது. அது என்னைப் பள்ளிவாசலுக்கு கொண்டு சேர்த்தது. அந்தப் பள்ளிவாசல் பேட்டனி என்ற பகுதியில் இருந்தது. அங்கு முதலில் நான் கண்டது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஸ்லோகனான எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்பதாகும். எனக்கு ஆரம்பத்திலிருந்தே இஸ்லாத்தின் மீது ஆர்வம் இருந்தது. இதனால் நான் எனது மற்ற எல்லா பணிகளையும் விட்டு விட்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களை ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்க ஆரம்பித்தேன். இதற்காக என்னிடம் வேண்டப்பட்டது. நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவான மிர்ஸா தாஹிர் அஹ்மது சாஹிப் ரஹிமஹுல்லாஹுத் தஆலா அவர்களை சந்தித்தேன். அவர்களுடன் இரண்டு மணி நேரம் பேசிய பிறகு நாங்கள் இருவரும் உலகத்தை ஒரே பார்வையில் தான் பார்க்கின்றோம் என்பதை நான் உணர்ந்தேன். எங்களது இந்த உரையாடலில் எனக்கு பல புதிய விஷயங்கள் இருந்தன.

பிறகு கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு நான் எனது இந்தப் பணியில் மூழ்கி விட்டேன். இந்த விஷயங்கள் தொடர்பாக எனக்கு அதிகம் புரியவில்லை என்றாலும் நான் மொழியாக்கம் செய்ய வேண்டும் என்றே நான் எண்ணினேன். ஆனால் இந்த நூல்களிலிருந்த கருத்துக்கள் எந்த அளவு தெளிவாகவும், அழகாகவும், பொருள் நிறைந்தவையாகவும் இருந்தனவென்றால் சிறிது காலம் கழிந்ததுமே எனக்கு அதில் திருப்தி ஏற்பட்டது. ஜமாஅத்தில் நான் இணைந்தது தற்செயலாக நடந்த விஷயமல்ல. அல்லாஹ்வின் விதி தான் என்னை இங்கு கொண்டு வந்தது.

இதற்குப் பிறகு இவர்களிடம் மொழிபெயர்ப்பு பணிகள் கொடுக்கப்பட்டன. பிறகு இஸ்லாமாபாத்தில் (இங்கு டெலிஃபோர்டில்) இவர் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. நல்ல திறந்த இடமாக அது இருந்தது. அறைகளும் இருந்தன. கூறுகின்றார்கள்: எனக்கு அந்த வீடு தரப்பட்டது. அங்கு பணியாற்றுவதில் எனக்கு இன்பமும் கிடைத்தது. நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

எழுதுகின்றார்கள்: இஸ்லாமாபாத்தில் முதல் நான்கு வாரங்கள் நான் முழுமையாக என்னை அர்ப்பணித்தவாறு பணியாற்றினேன். எதுவரையென்றால் மிகக் குறைவாகவே எனக்கு தூங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான்கு நூல்களை நான் மொழிபெயர்த்தேன். இந்த நூல்களை மொழிபெயர்த்துக் கொண்டிருந்த போது நான் ஜமாஅத்தின் வாதங்கள் மிகவும் வலுவானதாக இருப்பதை உணர்ந்தேன். அதில் மிகவும் பிரியமான வாதமாக நான் உணர்ந்தது, எதிர்காலத்தில் மிக விரைவில் இஸ்லாம் முழு உலகிலும் பரவி விடும் என்ற வாதமாகும்.

**பிறகு இவர்கள் எழுதுகின்றார்கள்:**

இந்தக் காலத்தில் ஓர் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துகின்ற பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக அஹ்மதிய்யா ஜமாஅத் வாதம் செய்கின்றது. இதை செய்வதற்கு இதைத் தவிர வேறு எந்த ஜமாஅத்தும் இல்லை என்று அது கூறுகிறது. இந்த ஜமாஅத் தான் முழு உலகையும் இறைவனது ஏகத்துவத்தை ஏற்கும்படி செய்யும் இன்ஷா அல்லாஹ். இந்த ஜமாஅத்தை உருவாக்கியவர் முழு உலகிற்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்துள்ளார் என்று இந்த ஜமாஅத் வாதம் செய்கின்றது. இந்த ஜமாஅத் முழு உலகையும் எதிர்த்து நிற்கின்றது. உலகிலுள்ள பல்வேறு சக்தி படைத்த வல்லரசுகளுக்கு இந்த ஜமாஅத் சவால் விடுகின்றது.

இவ்வாறு ரஷ்யர்களுக்காக எழுதிய தமது நூலேற்றில் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

எழுதுகின்றார்கள்: தொடக்கக் காலத்தில் இஸ்லாம் தொடர்பாக கூறப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் இந்த ஜமாஅத் இந்த சவாலை விடுக்கவில்லை. மாறாக உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் (அதில் கிறிஸ்தவமும் அடங்கும்) ஆன்மீகக் காலத்தில் திறந்த சவாலை அது விடுத்துள்ளது.

பிறகு தமது இந்த நூலில் தாம் கண்ட கனவை எழுதுகிறார். அதாவது நான் காஸான் என்ற இடத்தின், மர்ஜான் பள்ளிவாசலின் இரண்டாவது மாடியில் தொழுது கொண்டிருக்கிறேன். அங்கு பலர் சுன்னத் தொழுது கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு முன்னால் அப்போது ஜமாஅத் ஆன தொழுகைக்காக மக்கள் வரிசையில் நிற்கின்றார்கள். அப்போது நான் பார்க்கின்றேன். மற்றவர்கள் மிஃராபின் பக்கம் திரும்பி நிற்கின்றார்கள். ஆனால் நானோ ஒரு ஜன்னல் பக்கமாக திரும்பி நிற்கின்றேன். அந்த ஜன்னலிலிருந்து என் மீது சூரிய ஒளி படுகின்றது. மற்றவர்கள் எந்த திசையை நோக்கி நிற்கின்றார்களோ அந்த திசையை நோக்கியவாறு நான் ஏன் நிற்கவில்லை என்று நான் என்னிடமே கேட்கின்றேன். பிறகு கனவிலேயே நான், நானோ! பயணத்தில் இருக்கிறேன். இஸ்லாத்தின் போதனைக்கேற்ப பயணி பயணத்தில் தொழுதவாறு அவர் பயணத்தில் சென்று கொண்டிருக்கும் திசையின் பக்கமே பார்ப்பார். அதாவது எங்கிருந்து ஒளி வருகிறதோ அதன் பக்கம் பார்ப்பது அந்த சந்தர்ப்பத்தில் சரியானதுதான் என நான் கருதுகிறேன். பிறகு இந்தக் கனவைக் கூறியவாறு தொடர்ந்து எழுதுகின்றார்கள்.

ஜமாஅத்தான தொழுகைக்காக தக்பீர் கூறப்பட்டது. நான் மற்ற மக்களுடன் சேர்ந்தவாறு வரிசையில் நிற்கின்றேன். பிறகு இந்தக் காட்சி மாறி விடுகிறது.

எழுதுகின்றார்கள்: திடீரென்று நான் முற்றிலும் நிர்வாணமாக இருப்பதை நான் பார்க்கின்றேன். எனது தலை மட்டுமே மூடப்பட்டுள்ளது. ஆனால் அங்கு இவ்வளவு மக்கள் இருந்தும்கூட எந்த வெட்கத்தையும் நான் உணரவில்லை. இதைத் தவிர அந்த பள்ளிவாசலின் சுற்றுச்சூழலும் வழக்கத்திற்கு மாற்றமாக இருந்தது. மேற்புறத்தில் உள்ள கேலரியில் தாத்தாரிய மக்கள் வெள்ளைப் போர்வைகளைப் பிடித்தவாறு நிற்கின்றனர். இந்த எல்லா மக்களின் முன்னிலையிலும் நான் நிர்வாணமாக இருக்கின்ற இந்த நிலையைப் பார்த்து, புதிதாக பிறந்த ஒரு குழந்தையைப் போன்றே எனக்கு முற்றிலும் வெட்க உணர்வே ஏற்படவில்லை. அல்லாஹ்வின் முன்னிலையில் நான் எவ்வாறு நிர்வாணமாக நிற்க முடியும்? என்ற விஷயமும் எனது மூளையில் வருகிறது. நான் இந்த வியப்பூட்டும் கனவை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களிடம் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், ஒருவர் தனது முந்தையை ஆடையைக் கழற்றி விட்டு அல்லாஹ்வின் முன் ஒரு ஏழ்மையான நிலையிலும், நிர்வாணமான நிலையிலும் நிற்காத வரை

அவர் ஆன்மீக முறையில் மீண்டும் புதிய வாழ்வைப் பெற்று ஏக இறைவனின் பால் தமது பயணத்தை தொடங்க முடியாது என்று கூறினார்கள்.

எழுதுகின்றார்கள்: இந்தக் கனவின் மூலமாக இப்போது என்னிடம் எந்த சந்தேகமும் இல்லை என்று எனக்குத் தெரிய வந்தது. ஆன்மீகமான முறையில் மீண்டும் பிறப்பது மட்டும் போதாது. மாறாக கடந்த காலங்களில் செய்த எல்லா பாவங்களை விட்டும் தூய்மையடைந்து விட வேண்டும். அவற்றிலிருந்து அல்லாஹ்வே நம்மை தூய்மைப்படுத்த முடியும். அவ்வாறு பாவங்களிலிருந்து தூய்மையடைந்து ஒரு புது வாழ்க்கையை தொடங்குவது மிக முக்கியத்துவமானதாகும் என்ற இன்னொரு உண்மையும் எனக்கு திறந்து தரப்பட்டது.

பிறகு கூறுகின்றார்கள்: எப்போதிருந்து நான் இந்த வழியில் செல்ல தீர்மானித்தேனோ, அப்போதிருந்து என்னுடைய அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் நான் செல்கின்றேன். மேலும் உங்களையும் ஏனைய எல்லா மக்களையும் இதன் பக்கம் அழைக்கின்றேன் என்று கூறி அவர்கள் தமது ரஷ்ய மக்களுக்கு தப்லீக் செய்கின்றார்.

தொடர்ந்து எழுதுகின்றார்கள்: என்னுடைய பல மறைவான ஆசைகள் நிறைவேறின. எனது வாழ்க்கை வழக்கத்திற்கு மாற்றமாக, நடக்கின்ற இப்படிப்பட்ட சம்பவங்களால் நிறைந்து காணப்படுகிறது. இவற்றிற்கு தற்செயலாக நடந்தவை என பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

பிறகு இதே நூலில் இவர்கள் தமது வாழ்வில் நடைபெற்ற சில சம்பவங்களை எழுதியுள்ளார்கள். ராவில் சாஹிப் அவர்கள் சில ஜமாஅத் நூல்களை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். சில நூல்களில் செக்கிங் மற்றும் அதில் திருத்தம் செய்வது ஆகிய பணிகளையும் செய்துள்ளார்கள். அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்களில் தஃவத்துல் அமீர், மஸ்ஹப் கே நாம் பர் ஹுன், Stories from Early Islam, Muslim Festivals, Holy Muslims, இஸ்லாம் அவ்ர் அஸ்ரே ஹாஸிர் கே மஸாயில், Prophet’s Kindness to Children, சிறுவர்களுக்காக எழுதப்பட்ட சிறு நூல்கள், பிரசுரங்கள் ஆகியவை அடங்கும்.

எந்த நூல்களை இவர்கள் சரிபார்த்து செக்கிங் செய்துள்ளார்களோ அவற்றில், இஸ்லாமி உஸூல் இ பிலாஸஃபி, மஸீஹ் இந்துஸ்தான் மே, ஹமாரி தஃலீம், தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், இஸ்லாம் கா இக்திலாதி நிஸாம், இஸ்லாம் மே அவ்ரத் கா மகாம், முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை ஆகியவை உள்ளன.

இவ்வாறே அமைதிக் கருத்தரங்கில் பல்வேறு இடங்களில் நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் குறிப்பாக நமது ரஷ்ய மக்களுக்கு மிகவும் தேவையானவை என்று அவர்கள் கருதிய சொற்பொழிவுகளை இவர்கள் மொழியாக்கம் செய்துள்ளார்கள்.

ஆனால், திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்ததுதான் இவருடைய மிக முக்கியமான பணியாக இருந்தது. B.B.C. மற்றும் பல்வேறு இணையதளங்கள் ராவில் சாஹிபின் வஃபாத்திற்குப் பிறகு அவர்களைப் பாராட்டி செய்திகள் வெளியிட்டுள்ளன. bbc.russian –ல் அந்தாய் அஸ்கிஸ்க் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் இவர்களது சிறப்பு அம்சங்களாக இவர் குறித்த நேரத்தில் பணிகளை செய்பவராக இருந்தார். ஒருபோதும் தாமதமாக வந்ததில்லை. எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக அவர் இருந்தார். உண்மையான முஸ்லிமாக இருந்தார். மார்க்க அறிஞராக இருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. B.B.C.நேற்று இரவு அரை மணி நேரம் இவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. அதில் அவர்களது குரல் ஒலிபரப்பப்பட்டது. அவர்களைப் பற்றிய விஷயங்கள் கூறப்பட்டன. அதில் டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிப் பற்றியும் கூறினார்கள். டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிப் அஹ்மதி முஸ்லிமாவார். திருக்குர்ஆன் ஞானம் மூலமே அவர் நோபல் பரிசு பெற்றார் என்று கூறப்பட்டது. B.B.C.யில் உள்ளவர்கள் இவர் முழு ரஷ்யாவிலும் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்தார் என்றும் தாத்தாரிஸ்தானுடன் மட்டும் அவரது பணி நின்றுவிடவில்லை என்ற செய்தியைக் கூறியது. தாத்தாரிஸ்தானின் நேஷனல் டி.வி.யும் அவர்களது வஃபாத் பற்றிய செய்தியை வெளியிட்டது. அதில் அவர்களது நாட்டுப்பற்று பற்றி கூறப்பட்டது. அவர்கள் ஆஸன் மற்றும் தாத்தாரிய

சமுதாயத்துடன் அவர்கள் மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள் என்று கூறியது. இதனை டி.வி.யிலும், இன்டர்நெட்டிலும் அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் தொடர்பாக இன்டர்நெட்டில் அவர் அஹ்மதி முஸ்லிம் ஆவார் என்று எழுதப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பாக His you grand என்ற இணையதளத்தில் அவர்களது நேர்காணல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர்கள் அஹ்மதிய்யத்துடன் அவர்களுக்கு இருந்த தொடர்பு பற்றி மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அதல் ஒரு கேள்விக்கு பதில் கூறும் போது, அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகில் எனது பயணம் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆரம்பித்தது. அங்கிருந்து, உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் என்னை இலண்டனுக்கு வருமாறு அழைத்தது. இந்த ஜமாஅத் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்டதாகும். இதன் மோட்டோ, எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகை இல்லை என்பதாகும். இது எனது உள்ளத்திற்கு ஏற்பவே கூறப்பட்டுள்ளது. இஸ்லாத்திற்கு எதிரான செயல் என்று கூறும் வகையிலுள்ள எந்த பணியையும் நான் இவர்களிடம் பார்க்கவில்லை. உண்மையான இஸ்லாம் அஹ்மதிய்யத்தே ஆகும் என்று நாம் கூறலாம். இஸ்லாம் மவ்லவிகளுக்கு மட்டும் உரியதல்ல. அது முழு மனித இனத்திற்கும் உரியதாகும். இதை பின்பற்றுவதற்காக அவர்கள் இதை தேடிக் கொண்டிருந்தனர். மேலும் தங்கள் ஈமான் மூலமாக இதை நேசிக்கின்றனர்.

இவர்கள் எழுதுகின்றார்கள்: எனக்கு எனது வழி கிடைத்ததும், மேலும் இங்கு இருந்த சமயம் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளை ஆங்கில மொழியில் கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் பொதுவாக இருந்த வாழ்க்கையிலிருந்து நான் துண்டிக்கப்பட்டதும் அல்லாஹ் எவ்வாறு செய்தானென்றால் எனக்கு எல்லா பக்கங்களிலிருந்தும், வேலை செய்வதற்காக வரும்படி அழைப்பு விடுகின்றன அழைப்புக் கடிதங்கள் வர ஆரம்பித்தன. முதலில் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருந்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு மொழியாக்கம் செய்யும் பணிகளைச் செய்த பிறகு எப்படிப்பட்ட பரக்கத் ஏற்பட்டது என்றால் எல்லா இடங்களிலிருந்தும் அழைப்புக் கடிதங்கள் வர ஆரம்பித்தன. ரஷ்யாவில் பலமுறை இஸ்லாமிய கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக நான் அழைக்கப்பட்டேன்.

உங்களுடைய ஆசிரியர் யாராவது இருக்கின்றாரா? என்ற கேள்விக்கு பதில் கூறும் போது பெற்றோருக்குப் பிறகு எனக்கு ஆசிரியராக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா இருக்கின்றார். அப்படிப்பட்ட ஆசிரியர் எனக்கு காலதாமதமாக கிடைத்தார்கள். இப்படிப்பட்ட ஆசிரியர் இன்றிலிருந்து 20 வருடங்களுக்கு முன்பே கிடைத்திருந்தால் நான் பலவற்றை செய்திருப்பேனே! என்று கூறியுள்ளார்கள். ராவில் சாஹிப் அவர்கள் பல்வேறு சிறப்புகள் மற்றும் நற்பண்புகளை உடைய மனிதராக இருந்தும் சில சிறப்புகள் அவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. அவற்றில் ஒன்று அவர்கள் மிகுந்த தாழ்மையும், பணிவான இயல்பையும் கொண்ட மனிதராக இருந்தார்கள். அவர்களுக்கு கிலாஃபத் மீது பேரன்பும், நேசமும் இருந்தது. காலத்தின் கலீஃபாவுடன் ஒரு உறுதியான ஆன்மீக உறவு இருந்து வந்தது. அதற்கு எதிரில் அவரது பார்வையில் வேறு எந்த பொருளுக்கும் எந்தத் தகுதியும் இருக்கவில்லை. காலித் சாஹிப் எழுதுகின்றார்கள்: சமீபத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இறுதியில் என்னுடன் அவருடைய சந்திப்பு இருந்தது. காலித் சாஹிப் கூறுகின்றார்கள்: நானும் ராவில் சாஹிப் அவர்களும் உங்களை சந்திப்பதற்காக உங்களது அலுவலகத்திற்கு வந்தோம். அப்போது ராவில் சாஹிப் அவர்கள் ஒரு ஆலோசனையை என்னிடம் தெரிவித்தார்கள். அதாவது ரஷ்ய மொழியில் ஜமாஅத்தை முழுமையாக அறிமுகப்படுத்தி அதன் வரலாறையும் எடுத்துக் கூறும் வகையில் ஒரு முழுமையான நூல் வெளியிட வேண்டும் என்று கூறினார்கள். மேலும் அதில் முஸ்லிம் பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது எழுப்பப்படும் ஆட்சேபனைகளுக்கும் பதில் கூறப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஏனென்றால், இவர்களுக்கு மவ்லவிகள் ஜமாஅத் தொடர்பாக தவறான தகவல்களை தந்துள்ளார்கள். இதன் விளைவாக ஒவ்வொரு நாளும் ரஷ்யன் இணையதளங்களில் இதுபோன்ற ஆட்சேபனைகள் கூறப்பட்டு வருகிறது என்று என்னிடம் அவர்கள் கூறினார்கள். நான் அவர்களுக்கு நல்லது. இதற்கான நூலை எழுதுங்கள். ஆனால் குறிப்பாக இப்படிப்பட்ட ஆட்சேபனைகளுக்கு பதில் கூறும் முகமாக

ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் பதில் கூறும் வகையில் சிறு சிறு கட்டுரைகளாக அவற்றை தயார் செய்யுங்கள். பிறகு அதை வெளியிடுங்கள். பிறகு அவற்றை இணையதளங்களுக்கு அனுப்பி வையுங்கள் என்று கூறினேன். இதைக் கேட்டதும் ராவில் சாஹிப் அவர்கள் உடனடியாக ஹுஸூர் நல்லது அவ்வாறே செய்வோம் என்று கூறினார்கள்.

காலித் சாஹிப் கூறுகின்றார்கள்: சந்திப்பிற்குப் பிறகு நாங்கள் வெளியில் வந்த போது ராவில் சாஹிப் என்னிடம் இவ்வளவு நாட்களாக இந்தப் பணியை எப்படி ஆரம்பிப்பது? என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போது ஹுஸூர் எனது இந்த சிரமத்தை எளிதானதாக ஆக்கிவிட்டார்கள். இப்போது எனது மூளையில் அதற்கான முழுமையான வரைபடம் வந்து விட்டது. இந்த நூலை இப்படிப்பட்ட கட்டுரைகளின் வடிவத்தில் எப்படி வெளியிட வேண்டும் என்பது தெரிந்து விட்டது. இவை கிலாஃபத்தின் பரக்கத் மூலமாகவே நடந்துள்ளது. இந்தப் பணியை நான் இன்றிலிருந்தே ஆரம்பிக்கப் போகின்றேன் என்று கூறினார்கள். இதை தவிர ரஷ்யன் இணையதளம் ஒன்றை தயாரிக்கும் ஆலோசனையும் கூறப்பட்டது. அது தொடர்பாகவும் நீங்கள் விரைவாக ஆய்வு செய்து, யார் இதை தயார் செய்வார்கள்? எவ்வாறு இந்தப் பணி நடக்கும்? இதனை Upload யார் செய்வார்கள்? இதற்கான வழிமுறை எதுவாக இருக்கும்? என்று தெரிவியுங்கள் என்று நான் கூறியிருந்தேன். ராவில் சாஹிப் இதுபற்றி அறிவதற்காக நஸீம் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபுடன் தொடர்பு கொண்டு, பிறகு ஜெர்மனியில் மாலிக் ஸமர் இம்தியாஸ் சாஹிபை தொடர்பு கொண்டார்கள். பிறகு இவர்கள் மூலமாக இந்தப் பணி ஆரம்பமானது. ஆனால், இந்த பணிகள் நடந்து கொண்டிருக்கும் போதே அல்லாஹ்விடமிருந்து அவருக்கு அழைப்பு வந்து விட்டது. இணையதளம் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியவுடன் அவர்கள் அதனை செயல்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

காலித் சாஹிப் எழுதுகின்றார்கள்: நேரத்தை வீணாக்காமல் பணிகளைச் செய்வதும் ராவில் சாஹிபிடம் இருந்த ஒரு சிறப்பாகும். எவர்கள் அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தார்களோ, அவர்களைப் பற்றி அறிந்துள்ளார்களோ, மேலும் எவர்களுக்கு அவர்களுடன் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததோ அவர்கள், அவர் எப்போதும் ஒவ்வொரு பணியையும் மிக விரைவாகச் செய்து முடிக்க விரும்புவார்கள் என்பதற்கு சாட்சி கூறுகின்றவர்களாக இருப்பார்கள். அதைப் பார்க்கும் போது எப்போதுமே அதை செய்து முடிக்க மிக குறைவான நேரம்தான் அவர்களிடம் இருந்தது போல் தெரியும். நானும் இதை பார்த்துள்ளேன். ஒவ்வொரு பணியையும் மிக விரைவாக செய்து முடிக்க அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள். மிகக் குறைந்த நேரத்தில் அவர்கள் ஆயிரக்கணக்கான பணிகளைச் செய்து முடித்து விடுவார்கள். பணிகளைச் செய்யும் சமயத்தில் அவர்களிடம் இறைவனுக்காக கொஞ்சம் நிறுத்திக் கொள்ளுங்கள். சிறிது நேரம் ஓய்வாக இருங்கள் என்று கூற வேண்டியது வரும். அவ்வாறு கூறும்போது சிரித்தவாறு என்ன நீங்கள் சோர்ந்து விட்டீர்களா? நான் ஒருபோதும் சோர்வடைவதில்லை என்று கூறினார்கள். பணிகள் செய்து கொண்டிருக்கும் போது உணவிற்கான சமயம் வந்து விட்டால் உடனடியாக உணவருந்தி விட்டு மீண்டும் பணிகளைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். எப்போதும் ரஷ்யா மற்றும் ஏனைய பிரதேசங்களில் ஜமாஅத் முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. எப்போதெல்லாம் இலண்டனிலிருந்து மாஸ்கோ வருவார்களோ அப்போதெல்லாம் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளை தயார் செய்து அது தொடர்பான ஆலாசனைகளை கூறுவார்கள். எதுவரை இந்த விஷயங்களை நம் கண்முன் நிறுத்தியவாறு நாம் ரஷ்யாவில் செயல்படவில்லையோ அல்லது இந்த வழிமுறைகள் மூலம் மக்கள் கவனத்தை நம் பக்கம் ஈர்க்கவில்லையோ அதுவரை விரைவாக அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி மக்களை சென்றடையாது என்று கூறுவார்கள். மாஸ்கோ அல்லது கஸானில் உள்ள பிரச்சார நிலையங்கள் முறையாக ஒரு தனி வீடு அல்லது கட்டிடத்தின் வடிவத்தில் இல்லை. மாறாக அவை பிளாட்டுகளாக உள்ளன. அதனால் ஜமாஅத் சென்டர்கள் பற்றி கூறப்படும் போது மக்களது கற்பனையில் ஒரு பெரிய விரிவான கட்டிடம் தான் வரும். எனவே நாமும் இந்த பிளாட்டிற்குப் பதிலாக பெரும்பெரும் கட்டிடங்களை வாங்க வேண்டும் என்று கூறுவார்கள். என்னிடமிருந்து அவர் பெற்றுச் சென்ற தொகையை விட அதிக செலவுகள் ஏற்படும் போது, சில நேரங்களில் வேறு சில காரணங்களுக்காக அவர் கூறும் ஆலோசனைகளை நான் ரத்து செய்து விட்டால், அதை திறந்த

உள்ளத்துடன் ஏற்றுக் கொள்வார்கள். அதனால் அவரது முகத்தில் வருத்தத்தின் அறிகுறிகள் இருக்காது. அவர் கூறும் ஏதாவதொரு ஆலோசனையை நான் ரத்து செய்து விட்டால் அவநம்பிக்கையடைந்து உட்கார்ந்து விடவும் மாட்டார்கள். மாறாக அந்த ஆலாசனைக்குப் பதிலாக வேறு ஆலோசனைகளை கூறுவார்கள். அதற்கு மிகக் குறைந்த செலவுதான் வரும் அல்லது அந்தப் பணியை செய்வதற்கு வேறு ஏதாவது வழிமுறை இருக்கும். சுருக்கமாக, விரைவாக முழு ரஷ்யாவிலும் ஏதாவதொரு வகையில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி பரவி விட வேண்டும் என்ற கவலையே அவருக்கு இருந்தது.

**நமது முபல்லிக் ஹாபிஸ் செய்யது ரஹ்மான் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ராவில் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதிலிருந்து இன்று வரை 24 அல்லது 25 வருடங்களே கழிந்திருக்கும். ஆனால், அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அவருக்கு இருந்த தொடர்பு, கிலாஃபத்தின் உயர் தகுதி தொடர்பாக அவருக்கு இருந்த அறிவு ஆகியவற்றைப் பார்க்கும் போது பல தலைமுறையாக அவர்கள் அஹ்மதிய்யத்தில் தொடர்புடையவர்களாக இருந்தவர்கள் போல் தெரிய வரும். அவர்களது சில விஷயங்கள் பல அஹ்மதிகளுக்கும் ஒரு பாடமாக இருந்திருக்கின்றது. கூறுகின்றார்கள்:

ரஷ்யாவில் அஹ்மதிய்யத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்காக எப்போதும் அவரிடம் ஒரு வேதனையின் உணர்வு இருந்தது. ரஷ்யாவில் தப்லீக் பணிகளை பரப்புவதற்கும் அதை வேகமாக செய்வதற்கும் நான்காவது கிலாஃபத் மற்றும் ஐந்தாவது கிலாஃபத்தின் காலக்கட்டத்தில் காலத்தின் கலீஃபாக்களின் முன்னிலையில் தனது ஆலோசனைகளை எடுத்து வைத்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் காலத்தின் கலீஃபா அவர்களது ஏதாவதொரு ஆலோசனையை ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பொருத்தமற்றது என்று கருதினால் அல்லது அதே பணியை வேறு வகையில் செய்யும்படி கூறினால் ஒருபோதும் அது பற்றி தனது கவலையை வெளிப்படுத்தியதில்லை. அதுபற்றி எந்த கருத்தும் கூறியதில்லை. மாறாக, காலத்தின் கலீஃபா ஒரு விஷயம் தொடர்பாக ஒரு தெளிவான வழிகாட்டலை வழங்கியிருந்தால், அது தொடர்பாக அதிகப்படியான கருத்துக்களை கூறுவது எனது பார்வையில் அவமரியாதையான செயலும் பாவமாகும் என்று கூறுவார்கள்.

எந்த விஷயம் தொடர்பாக கலீஃபத்துல் மஸீஹின் வழிகாட்டல் இருக்கின்றதோ அதுபற்றி அதற்குப் பிறகு எதுவும் கூறாமல் அவர்கள் அமைதியாக இருந்து விடுவார்கள். கிலாஃபத்தின் உயர் தகுதியை புரிந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் பார்க்கும் போது அவரிடமுள்ள இந்த விஷயம் உண்மையிலேயே பல பழைய அஹ்மதிகளுக்கும் புதிதாக பைஅத் செய்பவர்களுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றது.

ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு தூய அஹ்மதி பெரியவர் மதிப்பிற்குரிய அவ்ராத் ஷரீபு கோ சாஹிப் ராவில் சாஹிபின் வஃபாத்திற்கு இரங்கல் கடிதம் எழுதியவாறு அதில் கூறுகின்றார்.

ராவில் சாஹிப் மகத்தான சிந்தனைகளின் எஜமானராகத் திகழ்ந்தார்கள். அவர்கள் மிக அதிகமான ஆக்கப்பூர்வமான பணிகளை செய்துள்ளார்கள். உழைப்பதையும், இஸ்லாமிய மார்க்கத்திற்கு அறிவுப்பூர்வமான ஞானமிக்க தொண்டுகளை செய்வதையும் அவர் தனது ஈமானாக கருதி வந்தார். இதனாலேயே அவர் முஸ்லிம்களின் சீர்திருத்தத்தை விரும்புகின்ற அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தேர்ந்தெடுத்தார். அதில் தன்னை இணைத்துக் கொண்டார்.

பிறகு கஸகஸ்தானிலிருந்தும் நமது ஒரு முஅல்லிம் தூஃபக் தோகமு சாஹிப் இவர்களது மரணத்திற்கு இரங்கல் தெரிவித்து எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ராவில் சாஹிப் பற்றிய அறிமுகம் எனக்கு, அவர் மொழியாக்கம் செய்த ஒரு ஜமாஅத் நூல் மூலமாகவே கிடைத்தது. ராவில் சாஹிப் மிக நல்ல, நேர்மையான மனிதராவார். தனக்கு நடைபெற்ற ஆபரேஷனுக்கு முன்னதாக அவர் ஆபரேஷனுக்கு பிறகு உயிர் வாழ்கின்ற சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தால் பிறகு நான் எனது வாழ்க்கையை அர்ப்பணித்து விடுவேன் என்று கூறியதாக நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம்.

மதிப்பிற்குரிய ராவில் சாஹிப் மிகுந்த தூய உள்ளம் கொண்டவராகவும் தான் கூறியவற்றை சரியாக நிறைவேற்றுபவராகவும் இருந்து வந்தார்கள். ஒருமுறை அவர்கள் M.T.A.வின் குழுவில் உள்ளவர்களுடன் இலண்டன் சென்ற சமயத்தில் என்னிடம் துஆவிற்காக கூறும்படி அவர் ராவில் சாஹிபிடம் கூறியதாக கூறுகின்றார். இலண்டன் சென்ற பிறகு அவர் முறைப்படி எனக்கு கடிதம் எழுதி உங்களது துஆவிற்கான விண்ணப்பத்தை நான் ஹுஸுரிடம் கொண்டு சேர்த்து விட்டேன் என்று தெரிவித்திருந்தார் என்று அவர்கள் எழுதியுள்ளார்கள்.

மத்திய ஆசியாவிலுள்ள நாடுகளில் எப்படி விரைவாக அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை தனது சமுதாயத்தில் உள்ளவர்களுக்கும், ரஷ்ய மொழியை பேசுவதற்கும், புரிவதற்கும், முடிந்தவர்களுக்கு அதை எட்ட வைக்க வேண்டும் என்பதற்காகவே எப்போதும் அவர்கள் முயற்சி செய்து வந்துள்ளார்கள். இதை அவர்களது நூல்களைப் படிக்கும் போது நம்மால் உணர முடிகின்றது.

பிறகு எழுதுகின்றார்கள்: ராவில் சாஹிப் உங்களது குத்பாக்களை தமது குரலில் M.T.A.வில் படிக்கும் போது அதாவது மொழியாக்கத்தைப் படிக்கும் போது மக்கள் காலத்தின் இமாமின் குரலை கேட்க வேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு படிக்கின்றனர் என்பதை நம்மால் உணர முடியும்.

மாஸ்கோ ஜமாஅத்தின் தலைவரான ருஷ்தம் ஹம்மாது வலி சாஹிப் தனது இரங்கல் கடிதத்தில் எழுதுகின்றார்கள்:

மதிப்பிற்குரிய ராவில் சாஹிப் விரிவான அறிவை உடைய நபராக இருந்தார்கள். அல்லாஹ் அளவற்ற அறிவாற்றலை அவருக்கு வழங்கியிருந்தான். அதன் மூலமாக திறந்த உள்ளத்துடன அவர்கள் மக்களுக்கு தொண்டாற்றினார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்கள் முழுமையாக தன்னை இறைவனுடைய அடியாராக ஆக்குவதற்கும் மக்களுக்கு தொண்டு புரிவதற்கும் அர்ப்பணித்து விட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களிடம் மகத்தான மனிதநேய நற்பண்புகளான பணிவு, மனித இனத்தை நேசிப்பது, மென்மை, பரிவு, மனத்தூய்மை, கண்டும் காணாமல் மன்னிக்கும் தன்மையுடன் நடந்து கொள்ளுதல், எப்போதும் இறைவனிடமே தனது தேவைகளைக் கேட்பது, எப்போதும் எல்லாருக்கும் உதவி செய்ய முயற்சி செய்வது, தனது சிறந்த தகுதிகளை பயன்படுத்துவதில் மற்றவர்களையும் பங்கு பெற வைப்பது ஆகியவை அடங்கும்.

**நமது முபல்லிக்கான பஷாரத் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

உங்களது குத்பா முதல் முறையாக ரஷ்ய மொழியில் ஒலிபரப்பப்பட்ட அந்த நொடிகள் எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. இரண்டு வருடங்களுக்கு முன் இந்தப் பணி ஆரம்பமானது. கூறுகின்றார்கள்:

அப்போது என்னுடன் ஒரு உள்ளூர் அஹ்மதி பெரியவரான மதிப்பிற்குரிய தொத்தோடோ சாஹிபும் அந்த குத்பாவை பார்த்துக் கொண்டிருந்தார்கள். குத்பா முடிந்ததும் எல்லாரது கண்களும் மகிழ்ச்சியால் ஈரமாக இருந்தது. எல்லாரும் ஒருவர் மற்றவரை கட்டித் தழுவியவாறு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். இந்த குத்பா மதிப்பிற்குரிய ராவில் சாஹிபின் குரலில் பதிவு செய்யப்பட்டிருந்தது. பிறகு அவர்களது குரலில் குத்பாக்களின் ஒரு தொடரே ஆரம்பமாகி விட்டது. அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் நமது தலைவரான தூய மஸீஹின் கலீஃபாவின் குரலை ரஷ்ய மொழியைப் பேசுகின்ற சகோதர, சகோதரிகளுக்கு முதல் முறையாக எட்ட வைத்த பெருமையும் அவருக்குத்தான் கிடைத்தது.

அவருக்கு காலத்தின் கலீஃபாவின் உதவிக்கரமாக செயல்படும் தவ்ஃபீக் கிடைத்துள்ளது.

பிறகு எழுதுகின்றார்: வெகு நாட்கள் கழிந்த பிறகு அவர் வந்தார். கிலாஃபத்தின் பரக்கத்தாலும் கிலாஃபத்தின் பரிவின் நிழலின்கீழ் இருந்தாலும் எங்களை முந்தியவாறு அவர் முன்னேறிச் சென்று விட்டார். அல்லாஹ் அவருடன் தனது அன்பு மற்றும் நேசத்தின் பரிமாற்றத்துடன் நடந்து கொள்வானாக. அல்லாஹ் இவரைப் போன்ற எண்ணற்ற சிறந்த உதவியாளர்களை வழங்குவானாக.

இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா இங்கு இருக்கின்றது. நான் ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். ஜனாஸா வெளியில் கொண்டு வரப்படும். எனவே நான் வெளியில் சென்று தொழ வைப்பேன். மக்கள் இங்கு பள்ளிவாசலிலேயே ஸஃப்பில் சீராக நின்று தொழுவார்கள்.

இதைத் தவிர மேலும் மூன்று ஜனாஸா காயிப் உள்ளன. ஒன்று, மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா தாவூத் அஹ்மது சாஹிபுடைய ஜனாஸாவாகும். இவர் சாஹிப் ஸாதா முஹம்மது ஸபீஃ சாஹிபின் மகனாவார்கள். இவர் பன்னூ மாவட்டத்தைச் சார்ந்த சராயே நூரான் என்ற இடத்தில் வசிப்பவர் ஆவார்கள். சாஹிப் ஸாதா தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் தந்தை வழியிலும் தாய் வழியிலும் அவரது தலைமுறை சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் வரை சென்றடைகின்றது. சாஹிப் ஸாதா தாவூது அஹ்மது சாஹிப் அவர்களையும் ஜனவரி மாதம் 23 ஆம் தேதி இரவு 9.45 மணிக்கு ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஷஹீது மர்ஹூமுடைய தாயாரான சாஹிப் ஸாதி அமத்துஸ் ஸலாம் சாஹிபா அவர்கள் அப்துஸ் ஸலாம் சாஹிபின் மகளாவார்கள். அவர்கள் சாஹிப்ஸாதா அப்துல் லதீப் சாஹிபின் மகனாவார்கள். இவ்வாறு சாஹிப்ஸாதா தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிபின் தாய்வழி கொள்ளுப்பேரன் ஆவார்கள். இவ்வாறே தந்தை வழியில் சாஹிப்ஸாதா தாவூது அஹ்மது சாஹிபின் தாத்தாவான சாஹிப் ஸாதா அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிபின் சகோதரியின் மகனாவார்கள். இந்த சகோதரியின் திருமணம் பீர் அக்பர் சாஹிபுடன் நடைபெற்றது. பிறகு இவர்கள் லாஹூரிகளின் ஜமாஅத்துடன் சேர்ந்து விட்டனர்.

ஷஹீதான சாஹிப் ஸாதா தாவூது அஹ்மது சாஹிப் அவர்களின் குடும்பம் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு ஆப்கானிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து சராயே நூரான் என்ற இடத்தில் குடிபெயர்ந்தது இவர்கள் 1955 ஆம் ஆண்டில் இங்கு பிறந்தார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்களை ஜனவரி மாதம் 23ம் தேதி ஏறக்குறைய 9.45 மணிக்கு ஷஹீதாக்கினார்கள். அந்த சமயத்தில் ஒரு பணி நிமித்தமாக அவர்கள் வெளியில் வந்தார்கள். அதிகாலையில் பஜார் செல்வதற்காக அவர்கள் வந்த போது சராயே நூரானில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சில நபர்கள் அவர்கள் மீது துப்பாக்கிசூடு செய்து அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள். இவரது ஷஹாதத்திற்கு முன்னதாக 2012 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 17ம் தேதி செவ்வாய்கிழமை சராயே நூரானில் வைத்து கத்மே நுபுவ்வத் அமைப்பைச் சார்ந்தவர்கள் ஒரு பெரிய மாநாட்டை நடத்தினார்கள். அதில் அவர்கள் ஜமாஅத்திற்கு எதிராக மிகவும் ஏசிப்பேசினர். பிறகு கேட்பவர்களையும் ஜமாஅத்திற்கு எதிராக தூண்டி விட்டனர். ஒரு தீய திட்டத்தின்கீழ் இந்த ஷஹாதத் நடந்திருக்கின்றது. ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தினர் லாஹூரி அஹ்மதிகளாக இருந்தனர். கிலாஃபத்தை விட்டும் தனியாக பிரிந்து சென்றனர். கிலாஃபத்திடம் பைஅத் செய்யாத நபர்களாக இவர்கள் இருந்தனர். மர்ஹூம் 8 வருடத்திற்கு முன் பைஅத் செய்தார்கள். பைஅத் செய்து ஜமாஅத்துடன் இணைந்தார்கள். தனது குடும்பத்தில் இவர் மட்டும் அஹ்மதியாக இருந்தார். குடும்பத்திலுள்ள மற்ற அனைவரும் லாஹூரி ஜமாஅத்துடன் தொடர்பு உடையவர்களாக இருக்கின்றார்கள். மிக நல்ல மனிதராகவும் தஹஜ்ஜுது தொழக்கூடியவராகவும் தீமைகளிலிருந்து விலகியிருப்பவராகவும் முறையாக சந்தா செலுத்துபவராகவும் நற்பண்புகளை உடையவராகவும் இவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்திற்கு ஒத்துழைப்பு கொடுப்பது, கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றிலும் பொதுவாக இவரது ஒழுக்கம் மிகவும் நல்லதாக இருந்தது. 2004-05 ஆம் ஆண்டில் இவருக்கு இதய நோய் ஏற்பட்டது. பைபாஸ் ஆப்பரேஷன் செய்யப்பட்டது. அவ்வாறிருந்தும் கூட இவர் முறையாக நோன்பு நோற்று வந்தார்கள். தனது வேலையிலிருந்து இவர்களே ஓய்வு பெற்றுக் கொண்டார்கள். இவரது சில நண்பர்கள் உங்களுக்கு இதற்கான பென்சன் தொகை கிடைக்கும் என்று கூறினார்கள். நீங்கள் பென்சன் தொகைக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் நான் வேலை பார்த்த சமயத்தில் என்னிடம் பல தவறுகளும், குறைகளும் ஏற்பட்டிருக்கலாம். எனவே இந்த குறைகள் மற்றும் தவறுகளுக்கு பதிலாக நான் இந்த பென்சனை அரசுக்கு தந்து விடுகின்றேன். அதன் மூலம் என் தரப்பிலிருந்தும் அரசாங்கத்திற்கு நான் செலுத்த வேண்டிய எந்த கடனும் இருக்க வேண்டாம் என்று கூறினார்கள்.

ஓய்வு பெற்ற பிறகு அவர்கள் தங்களது நிலங்களை கண்காணித்து வந்தார்கள். சராயே நூரானில் இருந்த ஒரு மார்க்கெட்டில் இருந்த தனது கடையிலிருந்து கிடைத்து வந்த வாடகை தொகை மூலம் தனது வாழ்நாளை கழித்து வந்தார்கள். ஷஹீது மர்ஹூமிற்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர். மனைவி அமத்துல் வஹீத் சாஹிபா உள்ளார். அவர்களுக்கு எந்த சந்ததியும் இல்லை.

நாம் கேள்விப்படுவது போன்று அஹ்மதிகளை அவ்வப்போது பாகிஸ்தானில் ஷஹீதாக்குகின்றார்கள். ஆனால் இந்த ஷஹாதத்துகள் நமது தைரியத்தை குறைக்கின்றவனா? பலமுறை நான் கூறியுள்ளேன். லாஹூர் பள்ளிவாசலில் நடந்து சம்பவத்தில் 84 நபர்கள் ஷஹீதானார்கள். இதனால் ஜமாஅத் சகோதரர்களின் தைரியம் குறைந்து விட்டது என்று இந்த மக்கள் நினைக்கலாம். ஆனால் அஹ்மதி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியவரிடமிருந்து வரும் கடிதங்களில் எங்களது தைரியம் முன்பை விட அதிகரித்துள்ளது என்று அவர்கள் எழுதியுள்ளனர். நாங்களும் தியாகம் செய்பவர்களில் ஒருவராக இருப்பதற்காக துஆ செய்யுங்கள் என்று அவர்கள் வேண்டுகின்றனர். இது வெறும் வார்த்தைகள் மட்டும் அல்ல. செயலளவிலும் ஒவ்வொரு இடத்திலிருந்தும் இதனை அவர்கள் செய்தும் காட்டியுள்ளனர். கடந்த மாதம் ஷஹீதான லய்யா என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்காக நான் ஜனாஸா தொழ வைத்தேன்.

இந்த ஷஹாதத் எப்படி நிகழ்ந்தது என்றால் மக்கள் மிஷன் ஹவுஸ் மீது தாக்குதல் நடத்தினார்கள். அங்குள்ள ஜமாஅத் சகோதரர்கள் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போது அதில் ஆண்களுடன் பெண்களும் கலந்து கொண்டனர். சிறிய சிறிய பிள்ளைகளைக் கொண்ட இளம் வயதுடைய இந்தப் பெண் எதிரிகள் தாக்கிய சமயத்தில் ஷஹீதாக்கி விட்டார்கள். அவருக்கு எவ்வித அச்சமும் பயமும் இருக்கவில்லை. எதிர்த்து நின்றவாறு மிகுந்த மகிழ்ச்சியுடன் ஷஹாதத்தின் பானத்தை இவர் அருந்தினார்.

இப்படிப்பட்ட அஹ்மதி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் தியாகங்கள் செய்வதற்கும் ஒருபோதும் அஞ்சியதில்லை. இன்று ஷஹீதாகியுள்ள சாஹிப் ஸாதா தாவூது சாஹிப் அவர்களின் இந்த நன்மைகளை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு இந்த நல்ல இயல்புள்ள மனிதருக்கு கிலாஃபத்துடன் பைஅத் செய்த நபர்களுடன் இணைவதற்கான தவ்ஃபீகை அல்லாஹ் வழங்கியுள்ளான். மேலும் ஷஹாதத் என்ற உயர்வான தகுதியும் அவருக்கு கிடைத்தது. இது அந்த ஈமானின் வலிமை மற்றும் தியாகங்கள் ஆகியவற்றின் ஒரு தொடராகும். இதனை அஹ்மதிய்யா ஜமாஅத் கடந்த நூறு ஆண்டுகளை விட அதிகமான காலகட்டத்தில் செய்து வந்திருக்கின்றது. இதன் துவக்கம் இன்று எந்த ஷஹீதின் ஜனாஸா தொழுகையை நான் தொழப் போகின்றோமோ அவரது கொள்ளுப் பாட்டனாரான சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் அவர்கள் மூலம் ஆரம்பமானது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அவர் இந்த தியாகத்தை செய்தார். இன்று ஹஸ்ரத் சாஹிப் ஸாதா சாஹிப் அவர்களின் ஆன்மா மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சி அடையும். நூறு ஆண்டுகளை விட அதிகமான காலகட்டம் கழிந்த பிறகும்கூட அவர்களது இரத்தம் தனது கடமையை நிறைவேற்றி இருக்கின்றது என்று நினைக்கும் போது, இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் அஹ்மதிகளில் நிலை நாளுக்குநாள் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. எனவே பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காக மிக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் அவர்களைப் பாதுகாப்பானாக. எல்லா தீங்கிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றுவானாக. எதிரிகளை விரைவாகப் பிடிப்பதற்கான வழிவகையை உருவாக்குவானாக.

இரண்டாவது ஜனாஸா நம்முடைய ஒரு தூய உள்ளம் கொண்ட சகோதரர் லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய வழக்குறைஞர் மிர்ஸா நஸீர் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர்கள் டிசம்பர் மாதம் 25ம் தேதி வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் 1948 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். பிறகு ஃபுர்கான் பட்டாலியலில் இவர்கள் இணைந்தார்கள். 1974 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது தரப்பிலிருந்தும் சில வழக்குறைஞர்களின் ஒரு குழுவை உருவாக்கினார்கள். அப்போது அவர்கள் இந்த குழுவின் உறுப்பினராக இருந்தார்கள். உச்சநீதி மன்றத்தில் ஜமாஅத்தின் வழக்குறைஞர் என்ற நிலையில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. பத்திரிகைத் துறையில் ஈடுபட்டவாறு பல்வேறு Column களை எழுதியும் ஜமாஅத்திற்கு

தொண்டாற்றி வந்துள்ளார்கள். பல ஜமாஅத் வழக்குகளை நடத்துவதில் இவர்கள் தொண்டு புரிந்துள்ளார்கள். இதைத் தவிர இவருக்கு 1984 ஆம் ஆண்டு இருந்த கொடுமையான Ordinance க்கு எதிராக ஜமாஅத் தரப்பிலிருந்தம் ஷரீஅத் நீதிமன்றத்தில் வழக்காடியவாறு, அந்த பேனலில் பங்கு பெறுகின்ற சந்தர்ப்பமும் இவருக்கு கிடைத்தது. லாஹூரில் பல்வேறு ஜமாஅத் தொண்டுகளில் இவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். ரிஸ்தா நாத்தா செயலர், மஜ்லிஸே இப்தாவின் உறுப்பினர், லாஹூர் ஜமாஅத்தின் காஸி ஆகிய தொண்டுகளில் இவர் இருந்து வந்தார். இவ்வாறு மனித உரிமைக் கமிஷன் என்ற நிலையிலும் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. 2010ம் ஆண்டு மே மாதம் 28ம் தேதி நடந்த சம்பவத்தின் போது இவர் தாருஸ் ஸிக்ரில் இருந்தார். இவரது மகனும் இவரோடு இருந்தார். அங்கு இவரது மகன் துப்பாக்கிச் சூடு நடந்த போது காயமுற்றார். அப்போது மிகவும் தைரியத்துடன் அவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். தனது மகனுக்கும் தைரியமூட்டினார்கள். துஆ செய்யக் கூடியவராகவும், போதுமென்ற மனம் கொண்டவராகவும், அதை விரும்புபவராகவும், பொறுமையைக் கடைபிடிப்பவராகவும், நன்றி செலுத்துபவராகவும், எல்லாரிடமும் நல்ல முறையில் பழகுகின்ற தூய உள்ளம் கொண்ட மனிதராகவும் அன்னார் இருந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக எல்லா தியாகங்களையும் செய்வதற்கு எப்போதும் அவர்கள் தயாராக இருந்தார்கள். எப்போதும் சூழ்நிலைக்கேற்ப பேசக்கூடியவராக அவர்கள் இருந்தார்கள். நகைச்சுவை உணர்வும் இவரிடம் இருந்தது. இவர் வஸிய்யத் செய்தவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவருடன் மக்ஃபிரத்துடன் பரிமாறுவானாக!

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய ராபியா பேகம் சாஹிபா உடையதாகும். இவர் இந்தியாவிலுள்ள அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மாஸ்டர் மஸ்ரிக் அலி சாஹிபின் மனைவியாவார்கள். ஜனவரி மாதம் 20ம் தேதி கல்கத்தாவில் இவர் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். பெங்கால் மற்றும் அஸ்ஸாமின் லஜ்னா தலைவி என்ற நிலையில் ஒரு நீண்ட காலம் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இவர் தமது கணவருடன் ஜமாஅத் பணிகளை செய்வதில் முழுமையாக ஒத்துழைப்பும் உதவியும் புரிந்து வந்தார். மஷ்ரிக் அலி சாஹிப் பங்கால் மற்றும் அஸ்ஸாமின் மாநில அமீர் ஆவார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் இவர் தமது கணவருடன் நீண்ட தூரம் ஜமாஅத் சுற்றுப் பயணங்களில் உடன் சென்று வந்தார்கள். மிகவும் தூய உள்ளம் கொண்ட நல்ல இயல்புடைய விசுவாசம் மிகுந்த நேர்மையான பெண்மணியாவார்கள். இவர்கள் விட்டுச் சென்ற உறவினர்களுள் கணவர் மற்றும் மூன்று மகள்களும் இரண்டு மகன்களும் உள்ளனர். இவரது ஒரு மகன் இஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஆவார். இவர் ஜல்ஸாவிலும் நஸ்ம் படிப்பவர் ஆவார். M.T.A.விலும் இவர் பல நஸ்ம்கள் படித்துள்ளார்கள். இன்றைய நாட்களில் இவர் ஜப்பானில் உள்ளார். அல்லாஹ் இவருடன் மக்ஃபிரத் புரிவானாக. இவரது பதவிகளை உயர்த்துவானாக. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இவர்கள் அனைவரது ஜனாஸா தொழுகையும் இப்போது ஜூமுஆவிற்குப் பிறகு தொழப்படும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 27.01.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456